Registered as a newspaper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.


மலர் 3 | மட்டக்களப்பு | புரட்டாதி – 1971 | விலை 30 | இதழ் 9



## நம் ஆயர் வாழ்க!

நம் ஆயர் இக்னேசியுஸ் திறிகேறூஸ் கிளெனி ஆண்டகை அவர்களுக்கு புரட்டாசி 21ந் திகதி ஒரு பொன்னான நாள், பெரிய திருநாள். ஏனெனில், இற்றைக்கு 24 ஆண்டுகட்கு முன் இத்தினத்தில்தான் ஆண்டகை அவர்கள் மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்பெற்றார். அன்று தொட்டு இன்றுவரை அவர் நமது மேற்றிராசனத்தைத் தமது கண்ணின் மணிபோல் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்றார். அன்னாருக்கு எமது நன்றியையும் நல் வாழ்த்துக்களையும் இந்நன்னாளில் கூறுவதுடன், இறைவன் அவரை இன்னும் பல ஆண்டுகளுக்குப் பாதுகாத்து, அவர் தம் மாபெருந் தொண்டைத் தொடர்ந்து செய்ய அவசியமான சகல ஆன்ம சரீர உதவிகளையும் அவருக்கு அளித்தருளும்படி இறைஞ்சுவோம்.

## எமது மேற்றிராசனத்திற்கு ஒரு புதிய குரவர்



இம்மாதம் 15ந் திகதி **திருத்தொண்டர் அ. அருளானந்தம்** அவர்கள் திருகோணமலை புனித மரியநாயகி ஆசனக் கோயிலில் பேரருள் திரு. இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை அவர்களால் குரு பதவிக்கு உயர்த்தப்படுவர்.

இவர் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் சில்லாலைப் பங்கைச் சேர்ந்த திரு. ப. அந்தோனிப்பிள்ளையுடையவும் திருமதி அக்கினேஸ் அந்தோனிப்பிள்ளையுடையவும் புதல்வர். இவர் சில்லாலை றே. க. ஆண்கள் பாடசாலையில் ஆரம்ப கல்வி கற்ற

[4ம் பக்கம் பார்க்கவும்]

**“திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## 27. ஞானஸ்நானம் கொடுப்பவரும், அதற்குரிய பொருள்களும்

சாதாரண சந்தர்ப்பங்களில் ஞானஸ்நானம் கொடுக்க மறை ஆயருக்கும், குருவுக்கும், திருத்தொண்டருக்கும் மட்டுமே உரிமையுண்டு. இவர்கள் திருச்சபையின் பிரதிநிதிகளாகவே இப்பணியைச் செய்கின்றனர். மறைஆயர் இறைவனின் மறைபொருள்களைப் பகிர்ந்தளிக்கும் பிரதான பணியாளராயிருப்பதாலும் ஒரு மறைமாவட்டத்தின் இறைவழிபாடு முழுவதற்கும் பொறுப்பாயிருப்பதாலும், ஞானஸ்நானம் அளிப்பதை அவர் ஒழுங்குபடுத்தவேண்டும். அதற்கு வேண்டிய ஆயத்தங்களையும் அவர் தன் கவனத்திற்குள் எடுத்துக்கொள்ள வேண்டும். விசேஷமாக பாஸ்கா திருவிழிப்பின்போது அவர் ஞானஸ்நானம் கொடுப்பது மிகவும் பொருத்தமானது.

மிகக்கிட்டிய மரண ஆபத்திலிருப்பவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க ஒரு குருவோ திருத்தொண்டரோ இல்லாத பட்சத்தில் ஒரு கத்தோலிக்கரோ, சரியான கருத்துள்ள வேறொருவரோ ஞானஸ்நானம் கொடுக்கலாம்; சில சந்தர்ப்பங்களில் கொடுக்கவும் வேண்டும். ஏனெனில், ஞானஸ்நானம் ஈடேற்றத்திற்கு அவசியமான சாதனமாகும். சாதாரண மரண ஆபத்தில் இருப்பவர்களுக்கு ஒரு குருவோ திருத்தொண்டரோ இல்லாதபோது, இப்போது புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள குறுகிய முறையைத் தழுவி ஒரு கத்தோலிக்கரே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். ஆகவே எல்லா இறைமக்களும், விசேஷமாய் பெற்றோர், வேதியர், மருத்துவப் பெண்கள், தாதிமார், வைத்தியர் ஆகியோர் அவசர சந்தர்ப்பங்களில் ஞானஸ்நானம் கொடுக்கும் முறையை அறிந்திருத்தல் வேண்டும்.

ஞானஸ்நானத்திற்கு இயற்கைத் தண்ணீரே பயன்படுத்தப்பட வேண்டும். அது சுத்தமானதாகவும் இருக்க வேண்டும். இதனால் திருவருட்சாதன அடையாளம் நிறைவுள்ளதாகும். தேவை ஏற்படும் போது வெந்நீரையும் பயன்படுத்தலாம். சாதாரண சந்தர்ப்பங்களில் மந்திரிக்கப்பட்ட நீர் மாத்திரமே ஞானஸ்நானத்திற்கு உபயோகிக்கப்பட வேண்டும்.

பாஸ்கா திருவிழிப்பின்போது அபிசேஷகம் செய்யப்படும் ஞானஸ்நான நீர், அன்றும், பாஸ்கா காலம் முழுவதிலும் உபயோகிக்கப்படுவது நன்று. ஏனெனில் இதனால் ஞானஸ்நானத்திற்கும் பாஸ்கா மறைபொருளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பு துலக்கமாகக் காட்டப்படும். பாஸ்கா காலத்திற்குப் புறம்பான காலங்களில் ஞானஸ்நானம் கொடுக்கப்படும் ஒவ்வொரு முறையும் அதற்கெனப் புது ஒழுங்கு முறைப்படி நீரை மந்திரித்தல் விரும்பத்தக்கது. இதனால் ஞானஸ்நானத் திருச்சடங்கில் பங்கு கொள்ளும் மக்கள், திருச்சபை விசுவாசத்தோடு நினைவுகூர்ந்து எடுத்துரைக்கும் மீட்பின் மறைபொருளை இலகுவாய் அறிந்துகொள்வார்கள்.

ஒவ்வொரு பங்குக் கோவிலிலும் ஒரு ஞானஸ்நானச் சிற்றாலயம் அல்லது ஒரு ஞானஸ்நானத் தொட்டி இருக்க வேண்டும். இச்சிற்றாலயத்தில் அல்லது தொட்டியில் ஓடும் நீர் இருந்தால் அந்நீரே ஞானஸ்நானத்திற்கு மந்திரிக்கப்படவேண்டும்.

ஞானஸ்நானச் சிற்றாலயம் மக்கள் நீரினாலும் பரிசுத்த ஆவியினாலும் மறுபிறப்பு அடைவதற்குத் தகுதிவாய்ந்த ஓர் இடமாக இருக்கவேண்டும். அது ஞானஸ்நானம் அளிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அது பலர் ஒன்றாகக்கூடி ஞானஸ்நானத் திருச்சடங்கில் செயல்முறையில் பங்குகொள்ள, போதிய இடவசதி உள்ளதாக இருக்கவேண்டும். பாஸ்கா திருவிழாவின் பின் ஞானஸ்நானச் சிற்றாலயத்தில் பாஸ்கா திரிக்கு சிறப்பான இடம் அளிக்கப்பட வேண்டும். ஞானஸ்நானத் திருச்சடங்கின் போது ஞான ஒளியைப் புதிதாகப் பெற்றவர்களின் திரிகள் இந்தப் பாஸ்காத் திரியிலிருந்துதான் கொளுத்தப்படும்.

[4ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாப்பரசரின் புதிய சமூகப் படிப்பினைகள்

*(சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

## 8. அரசியல் வாழ்க்கையும் கிறிஸ்தவனும்:

சமத்துவத்தை அடையவும், விவகாரங்களில் பங்கு கொள்ளவும் மனிதன் ஆவல் கொள்ளத் தொடங்கியிருக்கிறான். இந்த ஆவல்கள் ஜனநாயக அமைப்பை வளரச் செய்திருக்கின்றன. ஜனநாயக அமைப்புகளில் பலவகைகள் தோன்றியிருக்கின்றன. இவற்றில் எதுவும் முழுநிறைவு தருவதாக இல்லை. நிறைவு தரக்கூடிய மிகச் சீரிய அமைப்பை அடைகின்ற முயற்சியில் கிறிஸ்தவரும் பங்கு கொள்ள வேண்டும்.

அரசியல் அதிகாரம் மனிதனின் பொது நலனை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். தனிமனித உரிமை, குடும்பங்களின் உரிமை ஆகியவற்றை மதித்து மனிதனின் ஆன்மீக நலன் உட்பட உண்மையான எல்லா நலன்களையும் வளர்க்க உதவவேண்டும். பிறருக்குத் தொண்டாற்றுவதான கிறிஸ்தவ கடமையை வாழ்ந்து காட்டுவதற்கான முக்கிய இடம் அரசியல்தான். அரசியல் முயற்சியில் பங்கு கொள்ளும் கிறிஸ்தவர்கள் மனிதனுக்குத் தன்னலமற்ற தொண்டாற்றுவதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

பொறுப்புகளிலும் முடிவுகள் எடுப்பதிலும் அனைவருக்கும் சமமான பங்கு வேண்டும் என்பது மனிதனின் கோரிக்கை. எத்தனையோ இடையூறுகள் இருப்பினும், அவை இக் கோரிக்கையை நிறைவேற்றுவதைப் பாதிக்கக் கூடாது. வளர்ந்து வரும் பொறியியலின் ஆதிக்கத்தைச் சமாளிப்பதற்கு ஒவ்வொரு மனிதனும் நல்லறிவு பெறவும் தன் கருத்துக்களை வெளியிடவும் மட்டுமன்றி, பொறுப்புகளில் பங்கு கொள்ளவும் கூடிய வகையில் ஜனநாயக அமைப்புகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

## 9. அரசியல் வாதங்களும் கிறிஸ்தவனும்:

ஒரு கிறிஸ்தவன் தனது விசுவாசத்திற்கும் மனிதனைப் பற்றிய சரியான கோட்பாட்டிற்கும் எதிரான அரசியல் கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இறையுணர்வு இல்லாத பொருளியல் வாழ்வை வலியுறுத்தியும், வன்முறையை ஆதரித்தும், தனியாரின் சுதந்திரங்களைச் சமூகம் விழுங்கும் முறையைக் கையாண்டும், மனிதனுக்கும் அவனது தனிப்பட்ட பொதுவான வரலாற்றிற்கும் மேம்பாட்டை மறுத்தும் வரும் மார்க்ஸீய வாதத்தை அவன் ஏற்றுக்கொள்ள இயலாது. அதே போன்று தனிமனித சுதந்திரத்தை எவ்வித கட்டுப்பாட்டிற்கும் அப்பாற்பட்ட முறையில் மிகைப்படுத்தியும், சுயநலத்தையும் சுய ஆதிக்கத்தையும் தங்குதடையின்றித் தூண்டிக்கொண்டும் வரும் சுயாதீனவாதத்தையும் அவன் ஆதரிக்க முடியாது.

## 10. சோஷலிசக் கொள்கை:

சில கிறிஸ்தவர்கள் சோஷலிச வழிமுறைகளினால் கவரப்படுகிறார்கள். ஏனெனில் தங்கள் விசுவாசத்தின் காரணமாகக் கொண்டிருக்கும் ஆவல்களில் சிலவற்றை இவைகளில் காண்கின்றனர். இச் சரித்திர சம்பந்தமான இயக்கத்தில் தமக்கும் ஓர் இடமுண்டென்று உணருகின்றனர். ஆனால், இவ்வியக்கம் விசுவாசத்துடன் பொருந்த முடியாத கொள்கைகளிலிருந்து உற்பத்தியான போதிலும், இன்றும் சில இடங்களில் அவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள போதிலும், ஒரே பெயரின் கீழ் உலகின் வெவ்வேறு பாகங்களுக்கும் பண்பாடுகளுக்கும் ஏற்ற முறையில் வெவ்வேறு தோற்றங்களைக் கொண்டு விளங்குகின்றது. ஆகவே, நிதானமான தீர்மானத்தை வேண்டி நிற்கின்றது. அநேக சந்தர்ப்பங்களில் சோஷலிசத்தால் கவரப்படும் கிறிஸ்தவர்கள் பொதுவான குறிக்கோள்களை மட்டும் அதற்கு அளிக்கின்றனர்; அதாவது நீதியையும், ஒற்றுமையையும், சமத்துவத்தையும் நிலைநாட்டுதலை. வரலாற்றின்படி சோஷலிச இயக்கங்களில் காணக்கிடைக்கும் குறைபாடுகளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இவ்வியக்கங்கள் சில கொள்கைகளிலேயே ஊன்றி நிற்கின்றன. ஆகவே, சோஷலிசத்தின் வெவ்வேறு தோற்றங்களுள் ஒன்றைத் தெரிந்துகொள்வதற்கு, அவற்றின் குறிக்கோள், அரசியல் அமைப்பு, அடிப்படைக் கொள்கைகள் ஆகியவற்றை நன்கு அவதானிக்க வேண்டும்.

## 11. முன்னேற்றம்:

முன்னேற்றம் என்பது மனிதனின் விடுதலையைக் குறிப்பதாக அமைந்துள்ளது. என்

(4ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாப்பரசரின்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

றுமே முடிவற்றதாகத் தோன்றுகின்ற இம் முன்னேற்றத்தினுல் என்ன பயன்? பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முன்னேற்றத்தின் அளவைக் கணிப்பதை விடுத்து, ஒழுக்க நெறி உணர்வின் வளர்ச்சியில் ஏற்படும் முன்னேற்றத்தின் தரத்தைக் கணிக்க வேண்டும். கிறிஸ்துவின் மரணம், அவருடைய உயிர்ப்பு, பரிசுத்த ஆவியின் அருட்பொழிவு ஆகியவை உண்மை முன்னேற்றத்தின் எல்லைக்குள் தனது சுதந்திரத்தை வைத்துக்கொள்ளக் கிறிஸ்தவனுக்கு உதவுகின்றன.

### 12. பொருள்களைப் பகிர்ந்து கொள்வதில் கூடுதலான நீதி வேண்டும்:

பொருள்களைப் பகிர்ந்து கொள்வதில் தேசிய, சர்வதேச ரீதிகளில் இன்னும் அதிகமான நீதி நிலைநாட்டப்படவேண்டும். அனைத்துலக விவகாரங்களில் வன்முறைகள் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்படவேண்டும். ஒவ்வொரு நாடும் தன்னைத்தானே முன்னேற்றிக்கொள்ள அனுமதிக்கவேண்டும். அரசியல், பொருளாதார நெருக்கடி ஏற்படுத்தாமல் பிறநாடுகள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

### 13. செயலில் ஈடுபடவேண்டும்:

இதுவரை என்ன செய்திருக்கிறோம், என்ன செய்யவேண்டுமென்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் எண்ணிப் பார்க்கட்டும். கொள்கைகளை நினைவு கூர்ந்து நோக்கங்களை அறிக்கையிட்டு, அநீதியைச் சுட்டிக்காட்டி, வெறுப்புணர்ச்சியைக் கொட்டிக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஒவ்வொருவரும் தன் தன் பொறுப்பை உணர்ந்து பயனுள்ள முறையில் செயல்படாவிட்டால், இவையெல்லாம் பயனற்ற சொற்களாகிவிடும். அநீதி இருப்பதற்கான பொறுப்பைப் பிறர் மேல் சுமத்தி விடுவது எளிது. ஆனுல் ஒவ்வொருவரும் தான் அதற்கு எவ்வளவு காரணம் என்பதை உணர்ந்தால், அது பயனுள்ளதாக இருக்கும். ஆண்டவர் நமக்காக இவ்வுலகில் செயலாற்றி வருகிறுர் என்பதைக் கிறிஸ்தவன் அறிவதால் அவனுக்கு நம்பிக்கை பிறக்கிறது. இந்த நம்பிக்கைக்கு உறுதுணையாக நீதியையும் அமைதியையும் தோற்றுவிக்கப் பிறரும் உழைக்கிறுர்கள் என்ற உண்மை இருக்கின்றது. ஏனெனில் ஒவ்வொருவரின் உள்ளத்திலும், சகோதர உணர்வோடு வாழவேண்டுமென்ற ஆசையும், நீதிக்கும் சமாதானத்திற்குமான ஒரு தாகமும் இருக்கின்றன.

சமுதாயத்தைச் சீரமைக்கும் முயற்சியில் கிறிஸ்தவ நிறுவனங்களும் கூட்டு முயற்சியில் ஈடுபடவேண்டும்.

---

## இறைவழிபாட்டுச்......

[2ம் பக்கத் தொடர்ச்சி]

திருச்சபையின் பழைய காலங்களில் வளர்ந்தவர்களுக்கு ஞானஸ்நானம் முழுக்கு முறையில்தான் கொடுக்கப்பட்டு வந்தது. இம்முறை ஞானஸ்நானத்திற்கும் கிறிஸ்துவின் பாஸ்கா மறை பொருளுக்குமுள்ள நெருங்கிய தொடர்பை அடையாளத்தால் விளக்குவதற்கு மிகவும் உகந்தது. இதைப் புனித சின்னப்பர் சுட்டிக் காட்டியுள்ளார்: ''ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு புதைக்கப்பட்டீர்கள். இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல் மீது கொண்ட விசுவாசத்தால் அவரோடு நீங்கள் உயிர்த்தெழுந்தீர்கள்'' (கொலோ. 2, 12). வார்ப்பு முறையிலும் ஞானஸ்நானம் கொடுத்தல் பயன்படுத்தப்படுகின்றது.

ஞானஸ்நானம் கொடுப்பவர் ஞானஸ்நானம் பெறுபவரைத் தண்ணீரில் அமிழ்த்தும் போது அல்லது அவரது தலையில் தண்ணீரை வார்க்கும் போது ''பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால் நான் என்னைக் கழுவுகிறேன்'' என்ற வாக்கியத்தைக் கூற வேண்டும்.

---

## எமது மேற்றிராசனத்திற்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின், யாழ்ப்பாணத்திலுள்ள சிறிய குருமடத்தில் சேர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்தரக் கல்வி பயின்றபின், மெய்யியல் பயில மங்களூர்க் குருமடத்திற்குச் சென்றுர். பின்பு எமது மறைமாவட்டத்தில் சேர்ந்து கண்டிக் குருமடத்தில் இறையியல் கல்வியை இனிதே முடித்தார். கடந்த சில மாதங்களாகத் திருகோணமலைச் சமூக சேவை நிலையத்திலும், அக்கரைப்பற்றுப் பங்கிலும் திருத்தொண்டனுகக் கடமையாற்றியுள்ளார். இவரது குருத்துவ பணி எமது மறைமாவட்டத்தில் வளம் பெற்று நீடிக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுவதுடன் அன்னுருக்குத் **தொண்டன்** தனது நல்லாசிகளையும் சமர்ப்பிக்கின்றுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உள்ளங்கள் பலவிதம்

## மூதூர் N. C. அருள்வரதன்.

பாதையிலே ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களைக்கூட நான் பொருட்படுத்தவில்லை. நான் ஓடிக்கொண்டே இருந்தேன். என்னிதயம் பலமாக அடித்துக்கொண்டிருந்தது. ''கடவுளே! நீதான் என் தாயைக் காப்பாற்றவேண்டும்; தெய்வமே! என் தெய்வத்தை என்னிடத்திலிருந்து பிரித்திடாதே'' என என் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. சிந்தனை என்னைத் தன்வசமிழுத்தது. என்னை ஆண்டவன் மன்னிப்பானா? இல்லை மன்னிக்கவேமாட்டான்.

''இவனும் ஒரு மனிதனா? என்று உலகோர் கூறும் வசை மாரிகளைக் கேட்டுக்கேட்டு என்காதே புளித்து விட்டது. அவர்கள் கூறுவது உண்மைதானே! என் வாழ்க்கையே பெரும் விசித்திரமானது. செல்வச் செழிப்பையெல்லாம் கொடுத்த இறைவன் பிள்ளைச் செல்வத்தைக் கொடுக்கத் தவறிவிட்டான் என்ற காரணத்தால் தெருத் தெருவாக அனாதையாய் அலைந்து திரிந்த என்னை எடுத்து வளர்த்து ஆளாக்கிய உத்தமியல்லவா அவள்! தெருவிலே அனாதையாய் திரிந்த எனக்கு சீமான் வீட்டு வாழ்க்கை செருக்கை வளர்த்து விட்டது. நான் என்ன தவறு செய்தாலும் அவர்கள் என்னைக் கண்டிக்கவில்லை. வளர்ப்புப் பிள்ளையாய் இருந்தாலும் நான்தானே பிள்ளைக்குப் பிள்ளையாய் இருந்தவன். ஆண்டுகள் செல்லச் செல்ல அறிவு வளரும் என்பார்கள். ஆனால், நானோ மூர்க்கக் குணத்தில் வளர்ந்து கொண்டிருந்தேன். சீரும் சிறப்புமாக வாழ்ந்த அந்தக் குடும்பத்தை சீரழியவைத்து விட்டேனே! பாடசாலைக்கென்று என்னையனுப்பினார்கள். நான் கிழமையில் இரண்டு நாட்கள் கூடத் தொடர்ந்து போயிருக்கமாட்டேன். ''குடி'' என்னைக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருந்தது. உத்தமர்கள் வாசம் செய்யவேண்டிய அந்த வீடு காடையர்களின் களியாட்ட வீடாகக் காட்சியளித்தது. உள்ளமுடைந்த அவளின் அன்புக் கணவன் வேதனை தாங்காது கண்களை மூடிவிட்டார்.

''கெட்ட வழியில் நடக்காதே'' என்று அந்த உத்தமி புத்தி புகட்டிய வேளையிலெல்லாம் வாயில் வந்தபடி துஷணித்து விடுவேன். ஒரு சமயம் அவள் என் குடிகார அன்பர்களை விரட்டினாள் என்பதற்காக, என் பயங்கர முரட்டுக் கரங்கள் அந்த உத்தமியின் கன்னத்தைப் பதம் பார்த்து விட்டன. அவளைப் படுத்தாத கொடுமையில்லை என்றே சொல்லவேண்டும். அத்தோடு நான் முடிக்கவில்லை. அவளை ''பங்களாவை விட்டு விரட்டி குடிசையில் குடிவைத்துவிட்டேன். என் நண்பர்களெல்லாம் நன்மை செய்கிறார்களென்றுதான் எண்ணினேன். காலம் உருண்டோடிக்கொண்டிருந்தது உழைப்பற்ற அத்தனை ஜென்மங்களும் காசைக் கரைத்துக்கொண்டே இருந்தார்கள். என்நிலை அப்போதும் எனக்குத் தெரியவில்லை. காசும் கரையக்கரைய நட்பு வேடத்தில் வந்த நண்பர்கள் நடிப்பு முடிவடைந்துபோகிறபடியால் நழுவத்தொடங்கினார்கள். நான் தனித்துவிட்டேன். எனக்குப் பெரும் பீதியாக இருந்தது. என் நிலையை நான் உணர்ந்து கொண்டேன். என்னையெண்ணித் தனித்தபடி தவித்துக்கொண்டிருந்தது அந்த அன்புள்ளம். குடித்துவிட்டுக் கும்மாளம் போடும் அந்த ''பங்களா'' இன்று வெறிச்சோடிக் கிடந்தது. நல்லவர்களென்று நாணெண்ணியவர்களெல்லாம், நயவஞ்சகர்களென்பதை இப்போது நான் உணர்ந்து கொண்டேன். என்னிதயம் வெடித்துவிடும் போன்று இருந்தது. தள்ளாடியபடி என் கால்கள் தன்னந்தனியே தவித்துக்கொண்டிருக்கும் என் தாயின் குடிசைக்குள் என்னை இட்டுச் சென்றன. கண்ணீர் என் கண்களை மறைத்தன. அவளின் நிலை என்னை ஒருகணம் திகைக்கச் செய்தது. பல நாட்கள் ஊணற்று உறக்கமற்று இருந்த அவள் உயிருடன் போராடிக் கொண்டிருந்தாள். நான்படும் வேதனை கண்டு அந்த அன்புள்ளம் எனக்கு ஆறுதல் கூறியது. ஆனால் நான் நிம்மதி பெறவில்லை. ''கிறீச்'' என்னும் ''பிரேக்'' சத்தம் கேட்டு சிந்தனையில் இருந்து விடுபட்டேன். காரில் அடிபடத் தவறிவிட்டேன் என்பதை உணரக் கூடியதாகவிருந்தது. வைத்தியரின் வீட்டை நெருங்கிய நான் ஒருகணம் திகைத்து நின்று விட்டேன்.

அன்று வைத்தியசாலை திறக்கப்படமாட்டாதாம், டாக்டர் வெளியூர் சென்றுள்ளா

[8ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நற்செய்திச் சிந்தனைகள்

# (3) சிந்தித்தால்.....!

(அரு. 19: 25–27)

'உண்மை வழி நடப்பவனை இத்த உலகம் ஒருபோதும் கைவிடுவதில்லை'. எவ்வளவு அழகான சொற்றொடர். ஆனல் இந்த உலகத்தில் நடப்பதோ இக்கூற்றிற்கு மாறுன செய்கையே! உண்மை வழி நடப்பவனை இந்த உலகம் கைவிடாது, கசக்கிப் பிழிந்து ஆவியையே போக்கிவிடுகிறதே! வரலாறு நமக்கு இதைத்தானே காண்பிக்கிறது.

ஈ எறும்புக்குக்கூட துன்பம் நினையாது துண்பப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்கள் தம் துயர் துடைத்து, நோய் நீக்கி ஊமை போக்கி, அஞ்ஞானம் என்னும் இருளில் சிக்கித் திணறியவர்களுக்கு ஒளி விளக்காக வாழ்ந்து, உண்மையே பேசி, உண்மையையே போதித்து, உண்மையின் ஒளியாக திகழ்ந்தவர்தான் அந்த உத்தமர். அப்படிப் பட்டவருக்கு இந்த உலகம் அளித்த பரிசு, சவுக்கு அடி! முள்முடி!! இரத்தக்காயம்!!! இவ்வளவோடு நிறுத்தியிருந்தால் போதாதா! மரணதண்டனை வேறு. விதிக்கப்பட்ட தீர்ப்பின்படி இன்னும் இரண்டொரு நிமிடங்களில் அவரின் உயிர் பிரிந்துவிடும். மரண தாகம் இதோ அவரை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

எல்லையற்ற வியாகுல மிகுதியால், வேதனையோடு மரண அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் மகனின் காலடியில் நிற்கிருள் அந்த உத்தமரைப்பெற்ற அன்னை. துஷ்டப்பிள்ளையைப் பெற்றவள் கூட, அப்பிள்ளை பிறரால் தண்டிக்கப்படுவதை மனதாலும் விரும்புவதில்லை. அப்படியிருக்க உலகின் ஒளியாய், ஒரு பாவமும் அறியாதவராய் வாழ்ந்த தன் மகனுக்கு அதிகார வெறி அப்படியொரு தண்டனையை அளித்திருக்கும்போது, பாவம், அன்னை அவளால் மனதுள் குமுறிக் குமுறி அழுவதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்

சீவியத்தில் அவ் உத்தமரின் போதனைகளைப் பின்பற்றியவர்களுள் அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட பன்னிருவரில் ஒரு சீடரும் அன்னையோடு, அந்த உத்தமரின் மரண வேதனையைக்கண்டு துயரம் தாளாமல் துன்பப் பட்டுக்கொண்டு அங்கே நிற்கிருர்.

நேரம் நெருங்குகிறது. விண்ணும் மண்ணும் மேலும் வேதனையடையும் வேளை! மரண வேதனையின் உச்சக்கட்டம். அனைத்துலக மக்களின் ஆசாபாசங்களுக்காக தன்னையே குருதிப்பலியாக்கி சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் மீட்பரின் கண்கள் கீழே காலடியில் நின்று கண்ணீர் வடிப்பவர்களை நோக்குகின்றன. முதலில் அவர் கண்ணில் படுவது அவரது அன்பு அன்னை. அடுத்து காணப்படுவது, அவரால் பெரிதும் நேசிக்கப்பட்ட சீடர்.

கலங்கித் தவித்துக்கொண்டிருக்கும் அன்னையை நோக்கி ''அம்மா! இதோ உன் மகன்' என்று தனது சீடரைக் காட்டுகிருர். அதைத் தொடர்ந்து சீடரை நோக்கி ''இதோ உனது தாய்'' என்று தன் அன்னையைக் காட்டுகிருர். நெஞ்சம் இரண்டும் குமுறுகின்றன பொங்கி வரும் துன்பத்தை மறைத்துக்கொண்டு அன்னையைத் தேற்றுகிருர் சீடர்.

மீட்பரின் வாழ்வை, அவரது நற்போதனையை ஏற்று அதை உகலகெல்லாம் பரப்பும் பணியில் அவரால் தெரிந்தெடுக்கப் பட்டவர் தொகையோ பன்னிரெண்டு. ஆயினும் அவரின் இறுதி வாழ்வில்—மரணவேளையில் அவரது காலடியில் நின்று கண்ணீர் விட்டழக் கிடைத்ததுமன்றி, அவரை ஈன்றெடுத்து அமுதூட்டி அரவணைத்து வளர்த்துக்காத்து இறுதிவரை அவரோடிருந்த அந்த அன்னையையே தன் தாயாகப்பெற்ற அந்த சீடரின் பாக்கியந்தான் என்னே!

நாமும் நாளாந்தம் இறைவனின் ஆலயத்தில் கண்ணீர் விட்டு கழிவிரக்கப்படுகிருேம். ஆயினும் நம்மில் எத்தனை பேர் அந்தச் சீடராக மாறுகிருேம்? மீட்பரின் அன்னையை நம் அன்னையாகக் கொள்ளும் அளவிற்கு நாம் பாக்கியம் பெற்றவர்களா? இறுதிவரை இறைவனேடு ஒன்றித்து இருக்கக் கூடியவர்களா? மீட்பரின் அன்னையையே

[8ம் பக்கம் பார்க்கவும்]

## "எவ். எஸ். திரும(லை) ரூபன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வு

## "உலகத்தோடு உன் உறவு"

P. T. பிரான்சிஸ், கி. இ. தூ.
புளியந்தீவு.

திரு முழுக்கின் மூலம் இறைவனின் பிள்ளைகளாக்கப்பட்டு, உறுதிப்பூசுதலால் உறுதி பெற்றுள்ள நாம், உலகைக் கிறீஸ்தவ மனப்பான்மையில் உருவாக்கக் கடமைப்பட்டிருப்பதோடு, மனித சமுதாயத்தின் நடுவில் அனைத்திலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக இருக்கவும், அழைக்கப்பட்டிருக்கிறோம், என்பதை மறந்துவிடலாகாது.

புனித இராயப்பர் எம்மைப்பார்த்து கூறுகிறார்: ''நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இனம். அரச குருத்துவத் திருக்கூட்டம். பரிசுத்த குலம். இறைவனுக்குச் சொந்தமான மக்கள். உங்களை இருளினின்று தம் வியத்தரு ஒளிக்கி அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி.'' உலகில் உள்ள மனிதர்களில் எவரையும் இறைவன் தன் அன்பிலிருந்து ஒதுக்கிவிடுவதில்லை. எல்லோரும் இறைவனில் இன்புறவேண்டும் என்பதையே அவர் விரும்புகிறார். இறைவனின் உள்ளத்தின் விரிவு உலகத்தின் விரிவு என்பது போல் அகல விரிய வேண்டும். சகல மனிதர்களும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறியும் அறிவை மேற்கொள்ளவும் வேண்டுமென்று அவர் சித்தமாய் இருக்கிறார்.

நாம் இந்த மண்ணகத்திலே வாழ்ந்தாலும், இது நமக்குச் சொந்தமான இடமல்ல. நாம் விண்ணகத்துக்கு உரிமையானவர்கள். நித்திய தந்தையின் அன்பிலிருந்து புறப்பட்டு காலப்போக்கிலே மீட்பர் கிறிஸ்துவால் நிறுவப்பட்டு, பரிசுத்த ஆவியால் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள திருச்சபை ஈடேற்றமளிக்கும் குறிக்கோளைக்கொண்டிருந்தாலும், அது மறுவுலகில் மட்டுமே முழுமையடையும். கிறிஸ்து எம்மைப்பார்த்துக் கூறினார்: 'நீ உலகின் ஒளி' என்று. ஆம் நான் ஒளியேதான். அந்த ஒளி மற்றவர்களுக்கு எந்த விதத்தில் பயனளிக்கிறது என்று எப்போதாவது எண்ணிப் பார்த்ததுண்டா? கிறிஸ்தவன் ஒளியின் மகன் இந்த உலகத்தின் வாழ்வு இரவின் இருள் வாழ்வு. யேசுவின் உயிர்ப்பு என்னும் ஒளியில் பகல் விடிந்து விட்டது. இதைத்தான் புனித சின்னப்பரும் கூறுகிறார். ''இரவு முடியப் போகிறது. பகல் அண்மையில் உள்ளது'' என்று. நான் எனது ஒளியை மரக்காலின் கீழ் வைத்தேனோ? மாறாக விளக்குத்தண்டின் மீது வைத்தேனோ? கிறிஸ்தவ அழைப்பால் சேவை செய்ய அழைக்கப்பட்ட நாம் உலகின் உப்பாகவும் விளங்கவேண்டும். இளைஞர்களின் இயற்கையான குணம் அவர்களைச் சேவை செய்யத்தூண்டுகிறது. ஆகவே இளைஞர்கள் கிறிஸ்துவின் அன்பால் தூண்டப்பட்டு அன்போடும், கீழ்ப்படிதலோடும், சிறந்த சேவைகளைச் செய்தால்த்தான் உலகத்தோடு எம் உறவு நீடிக்க முடியும்.

உலகில் எம் உறவு நீடிக்க வேண்டுமானால் நம்மிடத்தில் பிறர் அன்பு பற்றியெரிய வேண்டும். ''உன்னைப்போல் உன் அயலானையும் நேசி'' என்ற யேசுவின் அன்புக்கட்டளையைப் பின்பற்றவேண்டும். நாம் பிறர் அன்பு உள்ளவர்களாக விளங்கும்படி அன்னை மரியே நமக்கு முன்மாதிரி காண்பித்துள்ளார். உறவினளாகிய எலிசபேத்தம்மாள் கருத்தரித்திருக்கிறாள் என்று கேள்விப்பட்டவுடனே அவ்விடம் விரைகின்றாள். குழந்தையைப்பெற்றெடுக்கும் வரை அவளுடன் இருந்து உதவி செய்கின்றாள். அடுத்ததாகக் கானாவூர் திருமண விருந்தின் போது இரசம் குறைவு பட்டதைக் கண்டதும், மகனிடமும் வேலையாட்களிடமும் தலையிட்டு மணமக்களுக்கு வர விருந்த அவமானத்தைத் தடை செய்கிறாள். மரியாளைப்போல் நாமும் கைமாறு கருதாது சேவை செய்ய வேண்டும். கிறிஸ்துவில் ஊற்றெடுக்கும் நமது அன்பு பிறருக்கும் வழிந்தோடவேண்டும்.

மற்ற மக்கள் எம்மைப் பார்க்கும்போது நாம் எமது நடத்தையினால் கிறீஸ்துவுக்கு சாட்சிகளாய் இருக்கவேண்டும். அவர்கள் எமது போதனையை அல்ல, சாதனையையே பார்க்கின்றனர். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பெருமைக்கு உரியவர்கள். புனித இராயப்பர்

(8ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறிஸ்தவ வாழ்வு...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவது நமக்கு முற்றிலும் பொருந்தும்: 'புற இனத்தார் உங்களைக் குறித்து நீங்கள் அக்கிரமிகள் என்று அவதூறு சொல்லும் போதே அவர்கள் உங்கள் நற்கிரிகைகளால் உங்களை மதித்து சந்திப்பின் நாளிலே சர்வேசுரனை ஸ்துதிக்கும்படியாக நீங்கள் அவர்கள் நடுவில் நன் நடத்தையுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று உங்களை மன்ருடுகிறேன்.'' தூய வாழ்க்கை முறையையே கிறிஸ்தவர்களிடமிருந்து ஏனையோர் எதிர்பார்க்கின்றனர். அப்பொழுதுதான் உலகத்தோடு எம் உறவு நீடிக்கமுடியும். அல்லது அவர்களின் வெறுப்பைத்தான் சம்பாதிக்கமுடியும்.

''நீங்கள் ஒவ்வொருவரும் தன் நலத்தையல்ல பிறர் நலத்தையே நாடவேண்டும்'' என்று புனித சின்னப்பரே கூறுகிருர். இதற்கு முதலில் எம்மிடம் அன்பு இருக்கவேண்டும். ''பூப்பூவா பூத்திருக்கு பூமியிலே ஆயிரம் பூ, பூவிலே சிறந்த பூ என்ன பூ'' என்று பாடியுள்ளான் கவிஞன். அதுதான் அன்பு. நம்மிடம் அந்த அன்பு இல்லேயேல் நாம் செய்யும் ஏனைய காரியங்கள் எல்லாம் வீணுகிவிடும். ''மனிதரும் தேவதூதரும் பேசும் எல்லா மொழிகளையும் நாம் பேசலாம். ஆயின் என்னிடம் அன்பு இல்லேயென்ருல் ஓசையிடுகிற வெண்கலம் போலவும், கிண்கிணீரென்கிற கைத்தாளம் போலவும் ஆனேன் ''என்று புனித சின்னப்பரே வேருேர் இடத்தில் கூறுகிருர்.

கிறிஸ்துவைப் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டியது நம் கடமை என்ற ஒரு விழிப்புணர்வு நம் ஒவ்வொருவரிடையேயும் தோன்றவேண்டும். பல கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாச ஒளியை மற்றவர்களுக்கும் பிரகாசிக்கச் செய்ய ஒரு சிறு முயற்சி முதலாய் எடுப்பதில்லை என்பதை நாம் அறியலாம். கத்தோலிக்க இல்லற வாசிகளின் கடமை என்ன என்பதைப் பாப்பு 12ம் பத்திநாதர் தமது கிறிஸ்துவின் ஞான உடல் என்ற நிருபத்தில் நன்று விளக்கியுள்ளார்: 'கடவுளின் பணிக்காகத் தங்களை அர்ப்பணம் செய்த திருத்தொண்டர்கள் மட்டுமல்ல திருச்சபையைத் தாயாகக்கொண்ட அத்தனை பேரும் கிறிஸ்துவின் ஞான உடலின் வளர்ச்சியில் ஈடுபடவேண்டும். இந்த ஞான உடலை வளர்ப்பதற்கும், முன்னேற்றமடையச் செய்வதற்கும் கடினமாக உழைக்கக் கடமைப்பட்டுள்ளனர் என்பதை உணரவேண்டும் என்பதே எமது விருப்பம்'' என்று அவர் ஆணித்தரமாகக்கூறியுள்ளார்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் இதையேதான் எம்மிடம் எதிர்பார்க்கின்றது சங்க ஏடுகளில் இல்லறத்தாரின் அப்போஸ்தல பணி பற்றிய தீர்மானத் தொகுப்பினை வாசிக்கும்போது அங்கு காண்பது என்ன? ''இறைமக்களின் அப்போஸ்தல பணியைத் தீவிரமாக்கும் நோக்கோடு இத்திருச் சங்கம் இல்லறத்தோரை ஆர்வமுடன் அழைக்கின்றது'' என்பதைக்காணமுடியும்.

எனவே அண்ணல் யேசு போதித்த அன்புப்பணி பெருகவும் உலகத்தோடு எம் உறவு நீடிக்கவும், இறை மகனைத் தன் மகனுகக் கொண்டு, தரணியில் அவரது அரியணை ஆட்சி பெருக அவரோடும் அவரது அன்புச் சீடர்களோடும் ஒத்துழைத்த அன்னை இராக்கினி புனித மரியாளிடம் எமது சேவையை ஒப்புக்கொடுப்போம். ✽

## சிந்தித்தால்...

[6ம் பக்கத் தொடர்ச்சி]

இறைவன் சுட்டிக்காட்டி எம்மைப் பார்த்து ''இதோ உனது தாய்'' என்று கூறுவாராளுல் அதைவிட மேலான மகிமை இருக்கமுடியுமா

மீட்பரை வளர்த்த அந்த மேலான அன்னையை நோக்கி ''இதோ உனது மகன்'' என்று என்னைக் காட்டிக் கூறக்கூடியவாறு நான் பக்குவமடைந்திருக்கிறேனு? மீட்பரின் விசேட அன்பையும் அன்னையின் அன்பையும் பெற்ற அந்தச் சீடராக நான் மாற முடியாதா? சிந்தித்துச் செயலாற்றினுல் காலம் விடை கூறும்.

வியாகுல அன்னையின் திருநாள் இம்மாதம் 15ந் திகதி கொண்டாடப்படுகின்றது. ★

## உள்ளங்கள்......

[5ம் பக்கத் தொடர்ச்சி]

ராம்.'' தொடர்ந்து அவ்விடத்தில் நில்லாது அடுத்த தெருவில் இருந்த வைத்தியருக்குத் தெருவித்துவிட்டு என் வீட்டை நோக்கி ஓடினேன். நான் வீட்டையடைந்ததும் டாக்டரின் காரும் வந்துவிட்டது. டாக்டரை அழைத்துக் கொண்டு குடிசைக்குள் நுழைந்தேன். ஆனுல் டாக்டருக்கு அங்கு வேலையிருக்கவில்லை. நான் பட்டமரம் போலானேன். அழுதேன். ஆனுல் கண்ணீர் வரவில்லை. அவை வற்றிவிட்டன. அந்த அழகுத் தெய்வத்தின் முகத்தை உற்று நோக்கினேன் அந்த முகத்தில் என்று மில்லாத புன்னகை தென்பட்டது. ''தன் மகன் திருந்திவிட்டான் என்ற பெருமையின் பூரிப்போ தெரியவில்லை''

(யாவும் கற்பனையே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கலை மன்றம்

## இறைவனை நம்பினோர் கெடுவதில்லை

திரு. J. அகுஸ்தீன்

**பாத்திரங்கள்:-** நபுக்கோதனசார் — அசீரியமன்னன்
ஓலொப்பேர்னெஸ் — அசீரிய படைத்தளபதி
யூதித் — எபிரேயப் பெண் (விதவை)
ஓஸியாஸ் — எபிரேயத் தலைவன்
தாதி, காவலாளிகள், சேனைத்தலைவர், எபிரேயர் முதலியோர்.

காட்சி I

*(அசீரிய மன்னன் மாளிகை படைத்தலைவர்கள் சேனைகள் புடைசூழ மன்னன் இருக்கிறான்)*

அரசன்:— எமது வெற்றிக்கு வித்திட்டு, வேண்டும் விதவித யோசனைகள் தந்து, அசீரிய அரசின் விரிவுக்கு ஆக்கமளித்த சமஸ்த மூத்தோர்களே! எமது வலது கரமாயிருந்து, வெற்றிமேல் வெற்றியீட்டி, தன்னலங்கருதாது சேவையீந்த படைத்தலைவர்களே, வாள் வலியாலும், தோள்வலியாலும், அசீரிய சாம்ராட்சியத்தைத் தழைக்கச் செய்த சேனுவீரர்களே! நாம் சென்ற இடமெல்லாம் வெற்றியைப் பற்றிக் கொண்டோம். ஆனுல்.... நம் வெற்றி பூரணமாகவில்லை. இவ்வுலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆகவேண்டும். அக்குடைமேல் கொடி கட்டிப் பறக்கவேண்டும். அசீரியர் ஆணை. அவ்வாணையின் அரசனுக நானிருக்க வேண்டும். அதற்கு கலிலேயா, எருசலேம், சமாரியா போன்ற பட்டினங்கள் முட்டுக்கட்டை போடுகின்றன. தலைக்கனம் பிடித்த அந்நாட்டார் எமக்குத் தலைவணங்க மாட்டார்களாம். (கோபத்துடன்) நான் அனுப்பிய தூதர்களை அலட்சியம் செய்து அனுப்பிவிட்டார்கள். ம்.... நமது பலத்தின் பெருமையை அவர்களுக்குப் பொருத்தமாக உணர்த்தவேண்டும்.

ஓலோப்பேர்னெஸ்:— (கம்பீரத்துடன் எழுந்து) அரசே! அசீரியத் தூதர்களை அவமதித்த அவர்களை அழித்துவிட்டு வருகிறேன். மனித உடல்களால் அம் மண்ணை மறைத்து, குருதியாற் கோலமிட்டு வருகிறேன். (குனிந்து) ஆணையிடுங்கள் மன்னவா.

அரசன்:— ஓலொப்பேர்னஸ், உனது சிங்கநாதம் தூங்கும் உள்ளங்களைத் தட்டியெழுப்பட்டும். உனது விறற்படையின் சங்கநாதம் விண்ணை முட்டட்டும். நமது கற்பனையைப் புறக்கணித்த அற்பர்களைச் சங்கரிக்கப் புறப்படு. எந்நாடும் உன் இரக்கத்தின் மன்னிப்பு அடையக் கூடாது. அந்த அகங்காரமுள்ள நாடுகள் அனைத்தும் என் காலடியிற் கிடக்கவேண்டும். ம்.... தொடங்கட்டும் உன் போர் விருந்து.... உணரட்டும் நம் உன்னதத்தை.... இவ்வுலகம். போர்முரசு கொட்டிபார் அரசு கொண்டு, வெற்றிப்பரணி பாடிவா. உனக்கு வேண்டிய உதவிகள் தாராளமாகக் கிடைக்கும்.
*(சபை கலைதல்)*

ஓலொப்:— (படை வீரர்களைப் பார்த்து) போர்த்திறன் படைத்த தலைவர்களே! எதிரிகள் தலைகளைப் பந்தாடிச் சிந்துபாடும் வீரர்களே!! அசீரியாவின் மானங் காக்கப் புறப்படுங்கள். அணைத்து மகிழும் மங்கையரையும், அருந்தி மகிழும் மதுவையும் துறந்து, புயல்முன் தூசென எதிரிகளை ஊதிவிட்டு வாருங்கள். நீங்கள் செல்லுமிடமெல்லாம் சிதைந்து போகட்டும்.... காணும் பயிரெல்லாம் நீருகட்டும்.... பூணும் அணியெல்லாம் நமதாகட்டும்.... அணுகும் உயிரெல்லாம் விண்ணேகட்டும்.... எம்மை எள்ளி நகையாடினோர் சிரங்களைத் தள்ளி விட்டு

(10ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கலை மன்றம்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

வாருங்கள்.... ம்.... பட்டயங்களை உருவுங்கள்.... வேழமென நடைநடந்து வெற்றிச் சிந்து பாடுவோம். நீங்கள் தோற்கடிக்கும் இனத்தோரின் தேவசின்னங்களை அழித்து விடுங்கள். நமது மதிப்புக்குரிய அரசரே அவர்களின் தெய்வமாகத் திகழவேண்டும். இன்னும் இரண்டு நாளிகைக்குள் நமது படை ஆயத்தமாக வேண்டும். (செல்லுதல்)

(திரை)

காட்சி II

(ஓலொப் பாசறையில் இருக்கிறான். படைத்தலைவர்கள் சூழ்ந்திருக்கிறார்கள்)

ஓலொப்:— நண்பர்களே! அலைகடல்போற் புரண்டுவரும் நம் படையின் வீரம் அறிந்தோர் நம்மைச் சரணடைந்து விட்டார்கள். நாம் சென்ற இடமெல்லாம் நம் வாளுக்கு வேலை கொடுக்காமல் வெற்றி தேடிவிட்டோம். (கோபத்துடன்) சே.... நம் போர்த்திறன் காட்ட வழி நமக்குக் கிடைக்கவில்லை. ஆகையால் என் மனக் குரோதந் தணிக்க வழி நமக்குக் கிடைக்கவில்லை. ஆகையால் என் மனக்குரோதந் தணிக்க வழி தேடினேன். ஆம்.... நம்மைச் சரணடைந்த தேசங்களிலேயும் கொள்ளையடித்தேன்.... கொடுமைப்படுத்தினேன்.... அவர்கள் ஆஸ்திகளை அக்கினிக்கு அளித்து அகங்களித்தேன்.... அப்போதுதான் என் உள்ளம் சாந்தி அடையும். நாம் பழிக்குப்பழி....

தலைவர்கள்:— வாங்கி விட்டோம்.... நம்மை விட வீரத்தில் விஞ்சியோர் இருக்க முடியாது தலைவரே. வீரத்தின் விளைநிலம் அசீரியா என்பது அகிலம் அறியச் செய்து விட்டோம்.

காவலன்:— (வந்து ஓலொப்பேர்னசை வணங்கி) பிரபு, தங்கள் கட்டளைப்படி நமது ஆணைக்குட்பட்ட நகரமாந்தர்களின் ஆராதனை விக்கிரகங்கள் யாவையும் உடைத்தெறிந்து விட்டோம். அவ்விடங்களில் நமது மேன்மைக்குரிய அரசரின் திருஉருவத்தைப் பிரதிஷ்டை செய்துள்ளோம். அவரையே தெய்வமாக வணங்கும்படி பறையறிவித்துள்ளோம்.

ஓலொப்:- நல்லது.... நீ போகலாம்.

1வது சேனைத்தலைவன்:— (எழுந்து வணங்கி) நமது மதிப்புக்குரிய தளபதி அவர்களின் தளரா முயற்சியே இப்பெரு வெற்றிக்குக் காரணம். தங்கள் ஊக்கத்திற்கு எம் வாழ்த்துக்கள்.

2வது சேனைத்தலைவன்:- (எழுந்து வணங்கி) தங்களை எம் தலைவராகப் பெற்றது எம் தவப்பயன். அசீரியத் தளபதி ஓலொப் பேர்னெஸ் வாழ்க! எம் மாபெரும் தலைவர் வாழ்க!! வாழ்க!!! எம் மன்னரின் மாபெருந்தோழர் வாழ்க!

ஓலொப்:- (கையமர்த்தி) நன்றி தோழர்களே, உங்கள் அனைவரின் ஒருமித்த ஒத்துழைப்பே எம் வெற்றிக்குக் காரணம். இந்த வெற்றிக்கு விழாவெடுப்போம். நாவுக்கு விருந்து.... இதோ.... மதுவருந்துங்கள். கண்ணுக்கு விருந்து அதோ.... (தாங்கள் சிறைப்படுத்திய சில பெண்களை கசையடி கொடுத்து நடனம் ஆட வைத்து ரசிக்கிறார்கள்)

எல்லோரும்:— (குடித்து மகிழ்ந்து) அருமையான விருந்து.

ஓலொப்:- நண்பர்களே! இதுவரை நமக்கு அடங்காமலிருப்பவர்கள் எபிரேயர்களே. அவர்களைச் சரணடைய வைத்து விட்டால்.... நாம் எடுத்த காரியம் வெற்றியே. ஆகவே நமது கடைசி முற்றுகை மலைமேலிருக்கும் பெத்தூலியாப் பட்டணம் நினைவிருக்கட்டும். நாளை நாம் புறப்படவேண்டும்.

எல்லோரும்:- நல்லது தளபதி.

(திரை)

காட்சி III

(பெத்தூலியாவின் அதிபதி ஓஸியாஸ் இருக்கிறான்)

காவலன்:- (வணங்கி) பிரபு, வாசலில் இஸ்ரவேலர் எல்லோரும் திரண்டு வந்துள்ளனர். அவர்கள் தங்களைக் காணவேண்டுமாம்.

ஓஸியாஸ்:- தொகையில் மிஞ்சிய இஸ்ரயேலர்கள் எல்லோரையும் இம் மண்டபம் ஏற்றுக்கொள்ளாது. ஆகவே அவர்களில் சிலரை மாத்திரம் இங்கு அனுப்பி வை. இஸ்ரயேலரின் பிரச்சனை என்ன என்பதை அவர்கள் உரைக்கட்டும். நீ

[11ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கலை மன்றம்......

[10ம் பக்கத் தொடர்ச்சி]

சென்று இஸ்ரயேல் மக்களிடம் இதைக் கூறி; அவர்களில் முதிர்ந்த அனுபவம் உள்ள ஓரிருவரை அனுப்பி வைக்கலாம்.

(காவலன் சென்று சிறிது நேரத்தி இரு முதிர்ந்த இஸ்ரயேலர் வந்து வணங்கல்)

ஒஸியாஸ்:- எதற்காகக் குடிமக்களெல்லாம் இங்கு கூடியிருக்கிறீர்கள்?

1ம் ஆள்:- (வணங்கி) பிரபு, திரண்டுவரும் அசீரியா சேனை பெத்தூலியாவுக்குள் பிரவேசிக்க முடியாதபடி மலை வாயில்களையும், மலைக்கணவாய்களையும் அடைத்துக் காவல் வைத்தோம். பலவருடங்களுக்கு வேண்டிய உணவுகளைச் சேகரித்து வைத்தோம். நாள்தோறும் விரதமிருந்து சர்வேசுரனைத் துதிக்கின்றோம். கடந்த இருபது நாட்களாக நீரெடுக்கும் ஊறணியை அசீரியப் படைகள் காவல் புரிகின்றனர்'

2ம் ஆள்:- அதனால் நமது ஜனங்கள் ஊறணியில் நீரெடுப்பதில்லை. ஊருக்குள் இருந்த கிணறுகள் வற்றிவிட்டன. நம் மக்கள் தாகத்தினால் தவிக்கிறார்கள். நீரின்றி நாவரண்டு இறந்தோர் அநேகர். எங்கள் மனைவிமக்கள் கண்ணெதிரே துடித்துச்சாவதைப் பார்த்துக்கொண்டிருப்பதை விட, ஓலொப்பேர்னெசிடம் சரணடைவது மேலாகத் தோன்றுகிறது. எங்கள் ஐயனே, இந்த ஏழைகளின் மேல் இரக்கங்காட்டுங்கள். அசீரியருடன் சமாதானமாகப் போவதை நிராகரிக்காதீர்கள்.

ஒஸியாஸ்:- (கண்ணீர் கசிய எழுந்து) சகோதரரே, பதறாதீர்கள். இன்னும் ஐந்து நாட்கள் பொறுத்து, சர்வேசுரனின் சகாயத்திற்குக் காத்திருப்போம். ஐந்து நாட்களுள் சர்வேசுரன் நமக்கு உதவாவிடில் நீங்கள் சொன்னது போலச் செய்வோம். நீங்கள் போய் உங்கள் ஜனங்களிடம் இதைச் சொல்லுங்கள்.

(இருவரும் வணங்கிச் செல்ல, ஒஸியாஸ் யோசனையில் ஆழ்ந்திருக்கிறான்)

காவலன்:- (வணங்கி) பிரபு, யூதித் என்ற மாது தங்களைக் காண வந்துள்ளாள்.

ஒஸியாஸ்:- அப்படியா வரச்சொல் (எழுந்து வரவேற்க, யூதித் தவக்கோலத்தோடு வரல்)

ஒஸியாஸ்:- வாருங்கள் இப்படி அமருங்கள். அம்மா! தாங்கள் இவ்விடம் நாடிய காரணத்தை அறியலாமா?

யூதித்:— பிரபு, ஐந்து நாட்களில் எங்களுக்குச் சர்வேசுரனின் ஒத்தாசை வராவிடில் பட்டணத்தை அசீரியர்களிடம் ஒப்படைப்பதாகத் தாங்கள் கூறியதைக் கேள்விப்பட்டேன். தாங்கள் கர்த்தருடைய கருணைக்குக் கெடுவுநாள் குறிப்பதெப்படி? நாம் மனஸ்தாபப்பட்டுக் கண்ணீர் சிந்தி மன்றாடுவதை விடுத்து, ஆண்டவரைச் சோதிக்கப் புறப்பட்டு விட்டோமே. நமது சத்துருக்களைக் கண்டு நாம் கலங்குவதுபோல, நமது சிறுமையகற்றிப் பெருமை தரும்படி ஆண்டவரை இறைஞ்சுவோம். நமது பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, மோயீசன் ஆகியோர் அநேக துன்பங்களாற் சோதிக்கப்பட்டு உன்னத மகிமை பெற்றார்கள். ஆகவே, எவ்வித இடறல்கள் வரினும் இறைவனைச் சோதிக்காமல் அவரைப் பணிந்தேத்துவோம்.

ஒஸியாஸ்:- அம்மா, நீர் சொல்லியவை அனைத்தும் உண்மையே. நீர் தேவபயமுள்ள பரிசுத்தமாது. ஆகவே, எங்களுக்காக இப்போதே மன்றாடுங்கள்.

யூதித்:— இன்று இரவு நீங்கள் தலைவாயிலில் இருங்கள். தாங்கள் சொல்லிய இவ்வைந்து நாட்களுக்குள் கர்த்தா தமது பிரஜையாகிய இஸ்ரயேலருக்கு உதவ வேண்டுமென்று மன்றாடுங்கள். நான் செய்யப்போவது என்னவென்று பின்பு சொல்லுகிறேன். அதுவரைக்கும் நம் ஆண்டவராகிய கர்த்தரிடன் எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

(திரை) (வளரும்)

எதிர்பாருங்கள்!

**புனித லூக்காஸ் சுவிசேஷம்**

அருட்திரு R. S. லோப்பு அடிகள் எழுதிய வழிகாட்டியுடன்

(க. பொ. த. (சாதாரண) பரீட்சையின் ரே. க. கிறிஸ்தவ பாடத்திற்கு உரிய நூல்)

வெகு விரைவில் வெளிவரும்.

கிடைக்குமிடம்:—

திருமறைக்கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## கிறிஸதவ போதக வழிகாட்டி

**பாடம். 16: பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்மேல் இறங்கி வந்தார்.**

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கம் என்னும் நூலின் 39ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. பரிசுத்த ஆவி அவர்களுக்கு எல்லாவற்றையும் கற்பித்ததிலிருந்தும், கிறிஸ்து அவர்களுக்கு சொல்லிய உண்மைகளை நினைவுக்கு கொண்டுவந்து, இறைவனின் தூதை எடுத்துரைக்கும்போது கையாள வேண்டிய வார்த்தைகளை அவர்களுக்கு கற்பித்ததிலிருந்தும், இவர்கள் புத்தித் தெளிவு அடைந்து மெய் அறிவைப் பெற்றனர் என்பது தெரிகின்றது.

2. தம்மிடமிருந்த கோழைத்தனத்தையும் அச்சத்தையும் நீக்கி, துன்புறுவோர்க்கு அறுதல் அளித்து, துன்பங்களைப் பொறுமையுடன் ஏற்று, விசுவாசத்திற்காக தங்கள் உயிரையே அர்ப்பணிக்க அவர்கள் காட்டிய மன உறுதியிலிருந்து அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியிடம் இருந்து மனவலிமை பெற்றனர் என்பது தெளிவாகின்றது.

3. பரிசுத்த ஆவி தம் கொடைகளோடும், வரங்களோடும் அவர்கள் உள்ளத்தில் இறங்கி வந்து அவர்களோடு இருந்து அவர்களைப் புனிதப்படுத்தினுர்.

4. ''மனுக்குலம் அனைத்தின் பேரிலும் என்னுடைய பரிசுத்த ஆவியைப் பொழிவேன்'' (யோவேல் 2,28) என முன் அறிவித்திருந்தார்.

**பயிற்சிகள்:**

கீழே தரப்பட்ட சொற்களைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புக

ஐம்பதாம்; பாஸ்கா; கிறீஸ்துநாதருடைய; ஆரோகணத்துக்குப்; பத்தாம்; பெந்தக்கோஸ்து; பரிசுத்த ஆவி; திருச்சபை

........................ திருநாளுக்குப் பின் ............... நாள், அதாவது.................... மோட்ச............... பின்.......................நாள், .............................. ஞாயிறன்று.................அப்போஸ்தலர் மேலும் ...............................மேலும் இறங்கி வந்த திருநாளைக் கொண்டாடுகிறோம்.

**பாடம். 17: பரிசுத்த ஆவியானவர் பல வகைகளில் திருச்சபையில் செயலாற்றுகிறார்.**

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கம் என்னும் நூலின் 41ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. பரிசுத்த ஆவியானவர் திருச்சபையில் தங்கியிருந்து அது ஒரு பொழுதும் தவறு வண்ணம் அதற்கு புத்தித் தெளிவு அளிக்கிறார். அதை இடையறாத வரங்களால் நிரப்பிப் புனிதப்படுத்துகிறார். வேதகலாபனைகள், ஆபத்துக்களிலிருந்து தப்புவித்து அதன் நித்திய கதிக்கு அதை நடத்திச் செல்லுகிறார்.

2. பரிசுத்த ஆவி நம்மைக் கடவுளின் பிள்ளைகளாக்குகிறார். அதற்கேற்ப நாம் வாழ்க்கை நடத்த உதவுகிறார். கடவுளின் அன்பை நம் இருதயங்களில் பொழிகிறார். தமது ஏழு கொடைகளையும் நமக்கு வழங்குகிறார்.

3. பரிசுத்த ஆவியின் ஏழு கொடைகள்: ஞானம், புத்தி, விமரிசை, அறிவு, திடம், பத்தி, தெய்வபயம்.

4. திருச்சபையிலுள்ள மேற்றிராணிமார், ஆசிரியர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றத் தேவையான எல்லா ஆற்றலையும் அவர்களுக்கு அளிக்கிறார். வேதசாட்சிகளும் துதியர்களும், தங்கள் திருமறைக்காக வீறுகொண்டு எழுந்து நிற்க பலத்தைக் கொடுக்கிறார் பிணியாளரின் சேவைக்கும் ஆத்தும

[13ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அலுவலுக்கும் தங்களை அர்ப்பணித்து இருப்பவர்கள் அனைவரையும் தம் அன்பினால் நிரப்புகிறார். பலமுறைகளில் அபூர்வமான கொடைகளையும் அளிக்கின்றார். உதாரணமாக புதுமை செயயும் வரம்.

**பயிற்சிகள்:**

பின்வருவன சரியா, பிழையா, எனக் குறிப்பிடுக.

அ. நாம் முயற்சி எடுத்தால் மாத்திரம் மோட்சம் சேரலாம். வேறு உதவி அவசியமில்லை.

ஆ. கடவுள் நமது ஈடேற்றத்துக்காக, நமக்கு அளிக்கும் உள்ளரங்க நன்கொடையை வரப்பிரசாதம் (தேவ அருள்) என்கிறோம்.

இ. பலவிதமான வரங்கள் உண்டு. ஆயினும் அவைகளை அளிக்கும் பரிசுத்த ஆவியானவர் ஒருவர்தான்.

ஈ. பரிசுத்த ஆவியின் கனிகளில் பரம அன்பும் ஒன்றாகும்.

உ. நமது ஈடேற்றத்திற்கு கடவுளின் வரப்பிரசாதம் தேவைப்படுகிறது.

## பாடம். 18: நாம் பரிசுத்த ஆவியினால் ஞான ஒளியையும் மன உறுதியையும் அடைகிறோம்.

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கம் என்னும் நூலின் 42ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. கடவுள் வெளிப்படுத்திய உண்மைகளை நாம் விசிவசித்து, அவரின் சித்தத்தைக் கண்டறிந்து, நம் புத்தியையும் இருதயத்தையும் திறக்க, பரிசுத்த ஆவி நமக்கு ஞான ஒளியை அளிக்கிறார்.

2. நமது மதக் கோட்பாட்டுக்கியைய நாம் வாழ்க்கை நடத்தவும், கடவுளின் சித்தத்தை நிறைவேற்றவும் தீமையை விலக்கி நன்மையைச் செய்யவும், சோதனைகளை மேற்கொள்ளவும், துன்புறுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும் பரிசுத்த ஆவி நமக்கு மன உறுதியை அளிக்கிறார்.

3. நமக்கு ஞான ஒளியையும் மன உறுதியையும் அளிக்கும் வரங்களை பரிசுத்த ஆவியின் ''உதவி வரப்பிரசாதம்'' (உதவி அருள்) என அழைக்கிறோம்.

4. ஏனெனில் ''உங்களிடத்தில் விரும்புதலையும் செய்து முடித்தலையும் சருவேசுரன் தாமே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி செய்து கொண்டு வருகிறார்.'' (பிலி. 2,13) என்று புனித சின்னப்பர் கூறியுள்ளார்.

5. நாம் அதிகம் செபித்தால், தேவதிரவிய அனுமானங்களை (திருவருட்சாதனங்களை) பெற்றால், அவருடைய பரிசுத்த தூண்டுதல்களுக்கு இசைந்து நடந்தால் கடவுள் அதிகமான வரப்பிரசாதங்களை நமக்குக் கொடுப்பார்.

**பயிற்சிகள்:**

பின்வரும் வாக்கியங்களைக் கொண்டு சரியான வசனங்கள் அமைக்குக:

1. பரிசுத்த ஆவி
2. ஒரு காரியத்தைச் செய்ய
3. எல்லா மனிதரும் ஈடேற்றம் அடைய வேண்டுமென்பது
4. பரிசுத்த ஆவியால் நடத்தப்படுவோர்
5. சோதனையை வெல்ல அவசியமானது
6. கடவுளின் சித்தம்
7. கடவுளின் பிள்ளைகள்
8. ஞான ஒளி அளிக்கிறார்
9. மனத்திடன்
10. கடவுளின் உதவி தேவை

## பாடம். 19. பரிசுத்த ஆவியினால் நாம் புனிதமாக்கப்படுகிறோம்.

இப்பாடம் கத்தோலிக்க திருமறை விளக்கம் என்னும் நூலின் 43ம் பாடமாகும்.

**சிந்தித்துப்பார்: விடைகள்:**

1. பரிசுத்த ஆவி முடிவில்லாத பேரின்ப வாழ்வுக்கு வழிவகுக்கும் அருள் வாழ்வை நமக்கு அளிக்கிறார்.

2. அருள் வாழ்வு இயற்கை வாழ்வைக் காட்டிலும் எவ்வளவோ மேற்பட்டதனால், அதை சுபாவத்துக்கு மேற்பட்ட வாழ்வு என அழைக்கிறோம்.

3. கடவுளுடைய பிள்ளைகளின் உள்ளங்களில் இருப்பவர் பரிசுத்த ஆவி.

4. அருள் வாழ்வினால் கடவுளோடு நெருங்கி ஐக்கியப்பட்டுப் புனிதமாக்கப்படுகிறோம். இதனால் அருள் வாழ்வை தேவ இஷ்டப்பிரசாதம் (அர்ச்சிக்கும் அருள்) என அழைக்கிறோம்.

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேசம்

### 4. கிறிஸ்துநாதரின் முக்கிய போதனைகள்.

**2. தேவபராமரிப்பு**
(12, 1–12, 22–32)

பரிசேயரின் பிழையான போதனைகளைக் குறித்து ஏற்கனவே இயேசு தம் அப்போஸ்தலர்களுக்குக் கூறியிருக்கிறார். அவர்களின் செயல் பற்றிக் கவனமாக இருக்கும்படி எச்சரித்துள்ளார். அவர்களின் போலி வேடத்தை எடுத்து இயம்ப புளிப்புமாவை இங்கே உதாரணமாக எடுத்துக் கூறுகின்றார். (மா முழுவதையும், புளிப்புமா புளிக்கவைக்கின்றது) நற்செய்தியை எடுத்துரைக்கும் பொழுது, அல்லது கடைசித் தீர்ப்பின் பொழுது, இவர்களின் போலி வேடம், நிட்சயமாக வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்படும். எனவே உண்மையை எந்நேரமும் ஒளியாமல் எடுத்துக் கூறுங்கள்.

கடவுளின் இராஜ்சியத்தில், உண்மையை எடுத்துரைக்கும்போது, எதிர்ப்புகள் சில வரும்; இன்னல்கள் பல ஏற்படும். ஆனால் அவற்றைக் கண்டுமனம்கலங்காதேயுங்கள். தற்காலிகமாக வாழ்வை எடுக்கிறவர்களுக்கு அஞ்சாதீர்கள். நித்திய வாழ்வை உங்களிடமிருந்து எடுக்கக் கூடியவருக்கே அஞ்சுங்கள். ஆத்துமத்தை நரகத்துக்கு அனுப்ப பசாசினால் முடியாது. கடவுளின் நீதியினால் மட்டுமே முடியும். கடவுள் ஒவ்வொன்றையும் படைத்து, காத்து போஷித்து வருகின்றார். அவரை அறியாமல் அணுவும் அசையாது.

பரிசுத்த ஆவியைப் பற்றிச் சிறிது கூறி முடித்ததும் இயேசு, தம் அப்போஸ்தலர்களுக்கும் அன்பர்களுக்கும், எதிர்காலத்தைப் பற்றிச் சிறிது கூறி, அவர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்த விரும்பினார். கிறீஸ்துவின் நாமத்துக்காக, கிறீஸ்துவுக்காக, கிறீஸ்தவன் துன்பப்படுத்தப்படுவான்; கொலைசெய்யப்படுவான்; ஏன் அதிகாரிகளுக்கு முன்னால்கூடக் கொண்டு போய் நிறுத்தப்படுவான். அந்நேரம் என்ன சொல்லுவது, எப்படிப் பதில் கூறுவது என்று பயப்படவேண்டாம். நீங்கள் கூறவேண்டியது இன்னதென்று, பரிசுத்த ஆவியே உங்களுக்கு அறிவூட்டுவார். கடைசி மட்டும் விடாமுயற்சியுடன் நிலைத்து நிற்கிறவர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

(அருட்திரு. R. S. லோப்பு அடிகள்)

கிறீஸ்துவைப் பின்செல்கிற எவனும் எப்பொருள் மீதும் தன் கவலையைப் போடக் கூடாது. உலகில் அளவுக்கு மிஞ்சிய கவலையுடன் சீவிக்கிறது ஒருவகையான நாஸ்திகம் என்றும் கூறலாம். கடவுளுக்கு உலகின்மீது முழு அதிகாரமுண்டு என்பதை இப்படியானவர்கள் நடைமுறையில ஏற்றுக்கொள்ளுவதில்லை. இவர்கள் கடவுளைக் கடவுளாக மதிப்பதில்லை. உலகின்கண் கவலை முழுவதையும் செலுத்துவது, மறு உலக வாழ்வை முற்றிலும் இழப்பதற்குச் சமன்.

உணவு, உடை, வீடு முக்கியமில்லை என்று இயேசு சொல்லவில்லை. அப்படி எவரும் கூறவும் முடியாது. உணவைவிட உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை என்று மாத்திரம் இயேசு கூறுகின்றார். சுவர் இருந்தால்தான் சித்திரம் கீறமுடியும். உயிருக்காக உணவும், உடலுக்காக உடையுமிருக்கிறது. தம் பிள்ளைகளுக்கு என்ன தேவை என்று நம் பரலோக தந்தைக்கு நன்கு தெரியும். எனவே கவலைப்படவேண்டாம். உங்கள் கவலை எல்லாம் கடவுளின் அரசில் போட்டு விடுங்கள்; மற்றெல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

**3. உலகப்பற்று அற்ற தன்மை**
(12, 13–21; 18, 18–27)

கிறீஸ்தவன் உலகத்தில் சீவிக்க வேண்டும். ஆனால் உலகத்தவனாகச் சீவிக்கக் கூடாது, என்பது கிறீஸ்துவின் படிப்பினை. உலகத்திலுள்ள பொருட்கள் எல்லாவற்றையும் கிறீஸ்தவன் நன்றாகப் பாவிக்க வேண்டும். ஆனால் அவற்றின்மீது தன் பற்றை வைக்கக்கூடாது. சுருக்கமாகச் சொல்லப்போனால்: மனத்தரித்திரர்களாகச் சீவிக்கவேண்டும், என்கிறார் இயேசு.

குடும்பச் சொத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் பிரச்சினையில் தலையிட விரும்பாத இயேசு, இப்பிரச்சினைக்கு அடி அத்திவாரமாக அமைந்திருக்கும் பொருள் ஆசை குறித்துச் சில வார்த்தைகள் இங்கே கூறுகின்றார். பணம், பொருள், நித்திய வாழ்வை ஒருவனுக்கு ஒரு

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்...

[14ம் பக்கத் தொடர்ச்சி]

பொழுதும் கொண்டுவராது. இவ் ஆசைகளுடன் வாழ்கிறவன் ஏற்கனவே நித்திய சீவியத்துக்கு மரித்துவிட்டான். பணத்தை உடன் தேவைக்கு மட்டுமின்றி ஆசைக்காக வைத்திருக்கிறவன், தேவ பராமரிப்பை மறுதலிக்கிறுன். ஏன் கடவுளையே நிராகரிக்கிறுன். உவமையில் வரும் பணக்காரனை 'அறிவிலி' என்று ஆண்டவர் அழைக்கின்றுர்.

பொருள் பண்டங்களை மேலெழுந்தவாரியாக தீயவை என்று கூறுவது பொருத்தமற்றது. இவைகளெல்லாம் கடவுளால் மனிதனுக்காகப் படைக்கப்பட்டவைகள். நல்ல பொருட்கள், நல்ல வாழ்வை நிட்சயமாகக் கொண்டுவரும் என்று கூறமுடியாது. பணம், பொருள் எல்லாம் நாம் கடவுளுடனும், பிறருடனும் நல்ல தொடர்பு வைத்திருக்க உதவ வேண்டும். ஒரு பெரியார் கூறியதை இங்கே ஞாபகப்படுத்துவது நல்லது. ஒருவன் உணவைத் தனக்காக மாத்திரம் வைத்திருப்பது உலக காரியம் (Material Matter) ஆனுல் உணவை அயலானுக்காகவும் வைத்திதுப்பது ஞானக் காரியம் (Spiritual Matter) என்று Baron Von Hugel கூறுகின்றுர்.

''முடிவில்லாத வாழ்வைப் பெற என்ன செய்யவேண்டும்?'' என்ற கேள்வியை ஒரு பணக்காரத் தலைவன் வாயிலாக லூக்காஸ் கேட்டிருக்கிறுர். முடிவில்லாத வாழ்வைப் பெற, விசேசமாக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. கடவுளின் கட்டளைகளடங்கிய பத்துக் கற்பனைகளைச் சரிவர அனுசரித்தால் போதும். அவன், கடவுளின் கட்டளைகளைச் சரிவர அனுசரிப்பதையறிந்த இயேசு, ஒரு படி மேலே சென்று, அவனிடமுள்ளதெல்லாம் விற்று, ஏழைகளுக்குத் தானம் செய்துவிட்டு, வந்து தன்னைப் பின் செல்லும்படி கூறுகின்றுர். இதை அவனுல் செய்யமுடியவில்லை. அவரைப் பின் செல்லவும் முடியவில்லை.

இதைக் கண்ணுற்ற இயேசு, கடவுளின் அரசில் செல்வர் நுளைவது அரிது என்று கூறி, ஒரு ஊசியின் காதில் ஒட்டகம் நுளைவது இதைவிட இலேசாக இருக்குமென்று ஒப்பிட்டுக் காட்டுகின்றுர் கடவுளின் இராட்சியத்துக்குள் செல்ல முழு இருதயம் அவசியம். பிரிவுபட்ட இருதயத்துக்கு அங்கே இடமில்லை. இதைக் கேட்டவர்கள். யாரால் இவ்வண்ணமிருக்கமுடியும்? என்று சிந்தித்தார்கள். மனிதரால் கூடாதது, கடவுளால் கூடும் என்று இயேசு கூறிஞர்.

எவ்வளவு நன்ருக நாம் வாழ்ந்த போதிலும், எமது இரட்சணியம் நிட்சயம் என்று நாம் கூறமுடியாது. இரட்சணியம் எம் கையிலில்லை. அதை நாம் எந்த நேரத்திலும் இழக்கலாம். எனவே, நாம் விழிப்பாக இருக்க வேண்டும். பிதாவிடம் அடிக்கடி மன்ருட வேண்டும்: ★

## மாணவர் மன்றம்...

[13ம் பக்கத் தொடர்ச்சி]

5. நாம் கடவுளுடைய பிள்ளைகள். ஆகையால் அவருடைய பிள்ளைகளுக்கேற்ற முறையில் வாழவேண்டும். கடவுளுக்கு அன்பு செய்து, அவருக்கு மகிமை அளிக்க வேண்டும். தேவதிரவிய அனுமானங்களை (திருவருட் சாதனங்களை) பெறவேண்டும். அவரின் சித்தப்படி நடக்கவேண்டும்.

**பயிற்சிகள்:**

சரியானதின் கீழ் கீறிடுக.

1. பரிசுத்த ஆவி நமக்கு (சுகவாழ்வு, அருள் வாழ்வு, நித்திய வாழ்வு) அளிக்கிருர்.

2. அருள்வாழ்வு உள்ள உள்ளங்களில் (பசாசு, காவற்சம்மனசு, பரிசுத்த ஆவி) குடிகொண்டிருக்கிருர்.

3. அருள் வாழ்விஞல் நாம் கடவுளோடு (தூரமான, உணரக்கூடிய, நெருங்கிய) ஐக்கியத்தைப் பெறுகின்ருேம்.

4. அர்ச்சிக்கும் அருளிஞல் நாம் கடவுளின் (பிள்ளைகள், சோதரர், தோழர்கள், சோதரிகள்) ஆகின்ருேம்.

5. பரிசுத்த ஆவி அதிபரிசுத்த திரீத்துவத்தின் (முதலாம், மூன்ரும், இரண்டாம்) ஆளாயிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## திருகோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கம்.

### நினைவூட்டல்

*பிராந்திய ரீதியில் செய்யவேண்டிய கருமங்கள்:—*

(அ) *பொது நிலையினர் அப்போஸ்தலப் பணியின் பிராந்திய சபைகள்:-*

1. வருடாந்த அறிக்கையைப் புரட்டாசி 10க்கு முன் பிராந்திய சபைக்கு அனுப்பவேண்டும்.
2. புது உத்தியோகஸ்தர்களின் பெயர்களைப் பிராந்திய அத்தியட்சகருக்குப் புரட்டாசி 15க்கு முன் அறிவிக்க வேண்டும். (உபவிதி 5)

(ஆ) *பிராந்திய சபைகள்:-*

1. வேலை வருடம் ஐப்பசி 1ல் ஆரம்பமாகி அடுத்த வருடம் புரட்டாசி 30ல் முடிவடையும். (உபவிதி 4)
2. செலுத்தவேண்டிய கட்டணத்தைப் புரட்டாசி 30க்குமுன் தி. ம. மே. ஐ. ச. தனாதிகாரிக்கு அனுப்பவேண்டும். (விதி 25)
3. வருடாந்த அறிக்கையை ஐப்பசி 10க்குமுன் தி. ம. மே. ஐ. ச. காரியதரிசிக்கும் பிரதம அத்தியட்சகருக்கும் அனுப்பவேண்டும். (உபவிதி 8)
4. புதிய உத்தியோகத்தர்களின் பெயர்களை ஐப்பசி 15க்குமுன் தி. ம. மே. ஐ. ச. பிரதம அத்தியட்சகருக்கும் செயலாளருக்கும் அறிவிக்க வேண்டும். (உபவிதி 7)
5. பிரேரிக்க விரும்பும் தி. ம. மே. ஐ. ச. பதவியாளருக்கான பெயர்களை ஐப்பசி 15க்குமுன் தி. ம. மே. ஐ. ச. பிரதம அத்தியட்சகருக்கும், செயலாளருக்கும் அனுப்பவேண்டும். (விதி 17, 2)
6. வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரேரிக்க விரும்பும் பிரேரணைகளை இரு வாரங்களுக்கு முன் பொதுக் காரியதரிசிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். (விதி 13 (1)

(இ) *பிராந்திய ஐக்கிய சங்கங்கள்:-*

வருடாந்த பொதுக்கூட்டம் புரட்டாசி மாதக் கடைசி வாரத்தில் நடைபெற வேண்டும். (விதி 32)

முக்கிய **அறிவித்தல்:**— பொது நிலையினரின் அப்போஸ்தல பணிக் குழுக்கள் தங்கள் வருடாந்த செயல் அறிக்கைகளைப் பிரசுரிக்க விரும்பினால் அரை Foolscap தாளின் முழுப்பக்கத்திற்கு ரூ. 10/-ம், அரை பக்கத்திற்கு ரூ. 5/-ம் என்ற முறைப்படி பங்குச்சபை, பிராந்தியசபை மூலம் கட்டணம் செலுத்தவேண்டும்.

A. W. அரியநாயகம்
செயலாளர்
தி. ம. மே. ஐ. சங்கம்

## மட்டக்களப்பு பிராந்திய மாதா சபைகளுக்கான இடைக்கால மகாநாடு

மேற்படி மகாநாடு சென்ற ஆடி 6ம் 7ம் திகதிகளில் மட்டக்களப்பு புளியந்தீவு புனித சிசிலியா பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது. இம் மகாநாட்டிற்கு மொத்தம் 125 அங்கத்தவர்கள் சமூகம் கொடுத்திருந்தனர். மகாநாட்டில் இரு விடயங்கள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டன:

1. இன்றைய உலகில் மாதா சபை,
2. மேற்றிராசனம் மாதா சபையிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றது?

இவ்விடயங்களை முறையே, அருட் திரு: சுவாமிநாதன் அடிகளும், செல்வன்: எம். டபிள்யூ. டிலிமா அவர்களும் விளக்கிப் பேசினர்கள். இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் மேற்படி பேச்சுக்களில் இருந்து இரு தீர்மானங்கள் செய்யப்பட்டு, அவை ஒவ்வொரு சபைக்கும் கொடுக்கப்பட்டன.

**க. இருதயநாதன்**
செயலாளர்
ம. பி. மா. சபைகள்.

## *சிறந்த கத்தோலிக்க நூல்கள்*

| | விலை | அஞ்சல்செலவு |
|---|---|---|
| 1. After Vatican II — | 2—50 | 60 சதம் |
| 2. 2ம் வத்திக்கான் சங்கத்தின் எதிரொலி | 3—50 | 60 ,, |
| 3. கர்த்தரின் செபமும் கிறிஸ்தவ பூரணத்துவமும் — | 1—50 | 60 ,, |

கிடைக்குமிடம்:—

திருமறைக்கல்வி நடுநிலையம்
ஆயர் இல்லம்,
மட்டக்களப்பு.

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S.S.J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1—9—71ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media